
DINAMANI

19 JUNE 2023

PAGE 8

# புதுவை பல்கலைக்கழக ஆராய்ச்சிக் குழுவினருக்கு பாராட்டு



புதுவைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் எம். பக்ததாஸ், அவரது ஆராய்ச்சிக் குழுவினரை பாராட்டிய பல்கலைக்கழகத் துணைவேந்தர் குர்மீத் சிங், கல்வி இயக்குநர் பேராசிரியர் க. தரணிக்கரசு.

**புதுச்சேரி, ஜூன் 18:** புதிய கலப்பின சேர்மங்களை உருவாக்கியதற்காக புதுவை மத்திய பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி குழுவினரை பல்கலைக்கழகத் துணைவேந்தர் குர்மீத்சிங் பாராட்டினார்.

புதுவைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் வேதியியல் துறை பேராசிரியர் எம். பக்ததாஸ் மற்றும் மாணவர் திருப்பதி ரெட்டி ஆகிய ஆராய்ச்சிக் குழுவினர் புதிய வழிமுறையில் இதுவரை பயன்படுத்தாத நாப்தாகுயினோன், பென்சோகுயினோன்கள், மேலிமைடுகள் மற்றும் சல்ஃபோலீன் ஆகியவற்றை ஆக்டிவேசன் வினைகளில் முதல் முறையாக உருவாக்கியுள்ளனர்.

இவர்களின் கண்டுபிடிப்பு எதிர்காலத்தில் பல்வேறு ஆராய்ச்சிகளுக்கு வழிவகுக்க உதவியாக இருப்பதுடன், பல்வேறு விதமான நோய்களுக்கு மருந்தாகப் பயன்படவும் வாய்ப்புள்ளது.

இந்த ஆய்வு குறித்து லண்டனில் உள்ள ராயல் சொசைட்டி ஆஃப் கெமிஸ்ட்ரியால் வெளியிடப்படும் ரசாயன அறிவியல் இதழில் வெளியிடப்பட்டுள்ளது. இதன்முலம் புதுவைப் பல்கலைக் கழகமும், சர்வதேச அளவில் பெருமைப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்காக சாதனைப் பேராசிரியர் எம். பக்ததாஸ் மற்றும் அவரது குழுவினரை பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் மற்றும் கல்வி இயக்குநர் பேராசிரியர் க. தரணிக்கரசு ஆகியோர் பாராட்டினர்.